Registered as a Newspaper

வைத்திய சேவை

செங்கமாரி, நாட்பட்ட வாதம், அல்சர், மாதர் ரோகங்கள் முதலியவற்றுக்கு ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்படும்.

ராஜ் வைத்திய நிலையம்
வீனஸ் கட்டடம்,
பத்திரிசிஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

வைத்திய சேவை

குழந்தைகள், சிறுவர்களின் சுணை, மாந்தம், முட்டு போன்ற சகல வியாதிகளுக்கும் சிகிச்சை வழங்கப்படும்
சிறந்தித் தைலங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ சத்யா கிளினிக்
210/6, காரைநகர் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 விபவ ஹூ மார்கழி மீ 13 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 18 (28-12-1988) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 30

## படையினர் மீது யாழ். நகரில் சூடு!

யாழ்ப்பாணம், டிச 28

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதிச் சந்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் ரோந்து சென்ற இந்தியப் படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஜவான் ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றும் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தினால் யாழ். நகரில் நேற்றுக் காலை பெரும் பதற்றம் நிலவியது: ஸ்ரான்லி வீதியில் உள்ள பெரும்பாலான கடைகள் நேற்று பகலுடன் மூடப்பட்டன. (உ-10)

## தேர்தலில் போட்டியிட கூட்டணி தீர்மானம்

கொழும்பு, டிச 28

வருகிற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடும் என்று தேர்தல் ஆணையாளருக்குச் சம்பிரதாயபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் சட்டப்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 31 தொகுதிகளில் போட்டியிடுவதற்காக 46 வேட்பாளர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியலை கூட்டணி சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பொதுத் திட்டம் ஒன்றின் கீழ் ஏனைய தமிழர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து போட்டியிடுவது சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார் (உ-எ)

## பொதுத்தேர்தலிலும் சிறிமாவோ போட்டி!

கொழும்பு, டிச 28

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா போட்டியிட ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

தேர்தல் பிரசாரப் பணிகளுக்கும் அவரே தலைமை வகிப்பார்.

நாடு எங்கும் சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் இது சம்பந்தமாக விடுத்த வேண்டுகோளை திருமதி பண்டாரநாயக்கா ஏற்றுக்கொண்டார்.

கட்சித் தலைமையலுவலகத்தில் சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் நடைபெற்ற கட்சியின் முக்கிய கூட்டம் இதுவாகும்.

இதேவேளை சுதந்திரக் கட்சியை பிரதான கட்சியாகக்கொண்ட ஜனநாயக மக்கள் அணியும் பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல தொகுதிகளிலும் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது. (உ-எ)

## ✯ தமிழக தேர்தல்

## 6 ஆயிரம் பேர் களத்தில்! குடியாத்தத்தில் 193 பேர்!!

சென்னை: டிச. 28

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் வரலாற்றிலேயே முதல் தடவையாக 6,143 வேட்பாளர்கள் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் 5 ஆயிரம் பேர் சுயேச்சை மற்றும் போட்டிக்கட்சி வேட்பாளர் ஆவர் என்று அறிவிக்கப்பட்டது.

ஏனையோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் அதிகார பூர்வ வேட்பாளர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

குடியாத்தம் தொகுதியில் மட்டும் போட்டியிட 193 வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

இந்தியாவின் தேர்தல் வரலாற்றிலேயே இது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ரூ. 70 லட்சம் நிதி பறிபோன விடயம்:

## யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் தப்பில்லை

யாழ்ப்பாணம், டிச, 28

யாழ். ஆஸ்பத்திரி கட்டட வேலைகளுக்கு என ஒதுக்கப்பட்ட ரூபா 70 லட்சம் நிதி பாவிக்கப்படாமல் திரும்பியதற்கு யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தின்மேல் தப்பில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த நிதி, ஆஸ்பத்திரியை நிர்வகிக்கும் போதனு வைத்தியசாலைகள் அமைச்சுக்கு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கான நிதி யாழ்ப்பாணம் கச்சேரி ஊடாகவே வழங்கப்பட்டது. கட்டடத்தை நிர்மாணித்து வரும் நிறுவனத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அடகு நகை மீட்பு

# வட்டிச்சலுகைக்கான காலம் நீடிக்கச்சிபார்சு

## மக்கள் வங்கித் தலைமையகம் ஆராய்ந்து வருவதாகத் தகவல்

யாழ்ப்பாணம், டிசம்பர் 28

வடமாகாணத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடகு வைத்தோருக்கு வழங்கப்பட்டிருக்கும் வட்டிச்சலுகைக்கான கால எல்லையை மேலும் நீடிக்குமாறு அடகு வைத்தோரின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக மக்கள் வங்கியின் பிராந்திய தலைமையலுவலகம் செய்திருக்கும் சிபார்சை மக்கள் வங்கித் தலைமையகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட்டிச்சலுகை இவ்வாண்டு கடைசி வரையே வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை 1989ஆம் ஆண்டில் மேலும் சில மாதங்களுக்கு நீடிக்குமாறு தற்போது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

வடமாகாண மக்கள் வங்கிக் கிளைகளில் நகை அடகு வைத்தவர்களுக்கு அரசாங்கம் விசேட சலுகையாக வட்டியை பதினைந்து சதவீதமாகக் குறைத்திருந்தது தெரிந்ததே. இந்தச் சலுகை இவ்வாண்டு இறுதிவரையே வழங்கப்படடிருக்கிறது.

இதனையடுத்து அடகு நகைகளை மீட்டெடுப்பதற்காக பெரும் எண்ணிக்கையானோர் மக்கள் வங்கிக் கிளைகளில் பணத்தைச் செலுத்தி வருகின்றனர். இதுவரை செலுத்தத் தவறியோருக்கும் இந்தச் சலுகை கிடைக்கச் செய்வதற்காக அதனை மேலும் சில மாதங்களுக்கு நீடிக்குமாறு தற்போது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது

இதேவேளை மக்கள் வங்கியில் வருடாந்த சணக்கெடுப்பு வேலைகள் நடப்பதன் காரணமாக எதிர்வரும் 29, 30, 31-ம் திகதிகளில் வங்கிக் கிளைகள் மூடப்பட்டிருக்கும் என்றும்—

இதனால் இத்தினங்களில் அடகு நகைகளை மீட்பதற்கு பொது மக்களால் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்படும் என்றும்—

இந்நிலையைத் தவிர்ப்பதற்காக வட்டிச் சலுகைக் கால எல்லையை ஜனவரி மாதத்தின் முதல் வார காலம்வரை நீடிக்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் அறிந்த வட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப... குடியாத்தத்திலே யாக்குச்சீட்டு அடிச் சணக்கிலே இருக்கும் எண்டு சொல்லுங்கோ...!

## பட்டாஸ் கொழுத்தத் தடை!

யாழ்ப்பாணம் டிச.28

பட்டாஸ் கொழுத்துவதற்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று யாழ்நகரகொமன்டன்ட் அலுவலகம் நேற்று அறிவித்தது.

இதுதொடர்பான உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## தெற்கில் தொடர்ந்தும் வன்செயல் சம்பவங்கள்

கொழும்பு டிச 28

தென்பகுதியில் தொடர்ந்து வன்செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

வெள்ளவாயாவில் நத்தார் தினத்தன்று இராணுவச் சீருடையில் வந்த கும்பல் ஒன்று இரண்டு சகோதரர்களை கடத்திச் சென்று சுட்டுக் கொன்றது.

வீரக்கெட்டியாவில் ஜீவானந்த என்ற பெயருடைய கிராமசேவையாளர் இனந்தெரியாதோரால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

பிபிலையில் ரஹ்மான் என்பவர் கொல்லப்பட்டார்.

அனுராதபுரத்தில் மதிஸ்வேவ என்னுமிடத்தில் ஒரு சடலம் மீட்கப்பட்டது

மொனறாகலையில் எல். ஏ. தர்மசிறி என்பவர் கொல்லப்பட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலி மேற்கு, டேர்பைன்

யாழ்ப்பாணம், டிச 28

வட்டுக்கோட்டை, சங்கானை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கும் யாழ். மாநகரசபை பகுதிக்கும் இன்று 'டேர்பைன்' மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை லங்கா சீமெந்து நிறுவனத்தில் உள்ள 'காஸ் டேர்பைன்' மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு சுழற்சி முறையில் இடவாரியாக வழங்கப்படுவது தெரிந்ததே.

## காவலூருக்கு மின்சாரம்

26ஆம் திகதி சில இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதாக அறிவிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மின்கோபுர திருத்த வேலை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் டிச.28

மதவாச்சிக்கும்- அனுராதபுரத்திற்கும் இடையில் ரம்பாவ என்ற இடத்தில் பழுதடைந்த மின்கோபுரத்தினைத் திருத்தும் வேலைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 14 துப்பாக்கிகளுடன் 4 இளைஞர்கள் கைது!

கொழும்பு, டிச 28

பதினான்கு துப்பாக்கிகளையும் ஓர் உரப்பை நிறைய வெடிமருந்தையும் வைத்திருந்தநான்கு இளைஞர்களை கினிகத்தேனையில் வைத்து ஹட்டன் பொலீஸார் கைது செய்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கொட்டகலையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான லொறி ஒன்றில் இவர்கள் பயணஞ் செய்து கொண்டிருந்த போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

சமனலவேவ மின்நிலையத்தின் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது காணாமற்போனதாக அறிவிக்கப்பட்ட துப்பாக்கிகளாக இவை இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

### சுபநேரம்

28. 12. 1988
மார்கழி 13
புதன்கிழமை
சுபநேரம்:
04.58முதல் 06 28வரை
ராகுகாலம்:
12 28 முதல் 01 58வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## உணவுப் பொருள்கள் யாழ் வருகின்றன

போதுமான அளவு உணவுப் பொருள்கள் இவ்வாரம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளன.

திருகோணமலையில் இருந்து 950 தொன் மாவை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நாளை 29 ஆம் திகதி காங்கேசன் துறைமுகம் வருகிறது.

400 தொன் அரிசியையும் 105 தொன் மாவையும் ஏற்றிக் கொண்டு சரக்கு ரயில் ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறது. (இ-5)

## இலங்கைக்கு அருகே எண்ணெய்க்கப்பல் எரிகிறது!

### எந்நேரமும் வெடித்துச் சிதறலாம்

லண்டன் டிச 28

இந்து சமுத்திரத்தில் இலங்கைக் கரையில் இருந்து சுமார் 500 மைல் தொலைவில்— எண்ணெய்க் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிவதாகவும் அக்கப்பல் எந்த நேரமும் வெடித்துச் சிதறலாம் என்றும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

சைப்பிரிய நாட்டைச் சேர்ந்த 2 லட்சத்து 850 ஆயிரம் டன் எடையுள்ள 'புருணி' என்ற கப்பலே தீப்பற்றி எரிகிறது.

மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் தொன் திரவு வாயுவை ஏற்றிக்கொண்டு இக்கப்பல் புவர்ட்டோ றிக்கோ துறைமுகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் என்ஜின் அறையில் திடீரென வெடிச்சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து கப்பல் தீப்பற்றிக் கொண்டது.

அபாயக் குரல் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து, இன்னொரு எண்ணெய்க் கப்பல் விரைந்து சென்று எரிந்து கொண்டிருந்த கப்பலின் 39 மாலுமிகளையும் காப்பாற்றியது. (உ-எ)

## ஐ.தே.க. தலைவர் பதவி சிறிசேன கூரேயுக்கு?

கொழும்பு, டிச 28

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராக கொழும்பு மாநகரமேயர் திரு. சிறிசேன கூரே தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 34ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 31ஆம் திகதி சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு ஆர். பிரேமதாஸ கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

நாளை வியாழக்கிழமை கட்சியின் செயற்குழுக் கூட்டம் இடம்பெறும்.

## விஜயவாடா பகுதியில் தொடர்ந்து பதற்றம்

விஜயவாடா, டிச 28

ஆந்திர மாநிலத்தில் விஜயவாடாவிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் பதற்ற நிலை நீடிப்பதாக அறிவிக்கப்பட்டது.

குழப்பம் விளைவிப்பவர்களைக் கண்டவுடன் சுடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதனிடையில் கலவரம் இடம்பெறும் 19 நகர்களில் ஊரடங்குச் சட்டம் நாளை வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது (உ-எ)

## மற்றொரு எம். எல். ஏ மீது கொலைக் குற்றச்சாட்டு!

ஆந்திராவில் இந்திரா காங்கிரஸ் எம் எல். ஏ. மோகன்ரங்கராவ் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தெலுங்கு தேசம் கட்சி எம் எல். ஏயான தேவிலாணி ராஜசேகர் மீதும் அவரது ஆதரவாளர்கள் 115 பேர் மீதும் பொலீஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மோகன்ரங்கராவை கொலைசெய்ய சதிசெய்ததாக ராஜசேகர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது

மோகன்ரங்கராவ் கொலை செய்யப்பட்டதை அடுத்து வெடித்த கலவரத்தில் 32 பேர் உயிரிழந்தனர். 20 அரச அலுவலகங்கள், இருநூறு பஸ்கள், நூறு கடைகள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன.

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்) (உ)

## சாவகச்சேரி, அச்சுவேலி, கோப்பாய், கிளிநொச்சியில் சுகாதார நிலையங்கள்

யாழ்ப்பாணம் டிச 28

சாவகச்சேரி, அச்சுவேலி, கோப்பாய், கிளிநொச்சி ஆகிய இடங்களில் நான்கு சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன;

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் இந்த நிலையங்களை அடுத்த வருடம் நிர்மாணிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

ஒவ்வொரு நிலையத்தையும் அமைப்பதற்கு சுமார் இரண்டரை லட்சம் ரூபா முதல் மூன்று லட்சம் ரூபா வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

### வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம் டிச 28

சாவகச்சேரி சங்கத்தானை பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் கண்டதுண்டமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்

வெட்டப்பட்ட இவரது தலை,கைகள் வெவ்வேறு இடங்களில் காணப்பட்டன.(இ-10)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், ஹோல் செற், கண்ணாடி மேசை, Show case, Baby தொட்டில், வாங்கு மேசை, கடைச்சல்வேலை அமைந்த அலுமாரி, மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 307 பலாலிறோட், திருநெல்வேலி சென்றல் நேசிங் ஹோம் எதிரில். (8508)

3 மாதம் நன்கு வளர்க்கப்பட்ட முட்டை இடும் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S. சேதீஸ்வரன், ஆறுகால் மடம் (மூன்வீடு), மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (8431)

3 K. V. Lister ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு நா. சிவபாலமூர்த்தி பாதிரி கோவிலடி லேன், கே கே,எஸ். றோட், கொக்குவில். (8395)

Love Birds விற்பனைக்கு உண்டு சகல விதமான நிறமும் வெள்ளை உட்பட உள்ளது. உடன் தொடர்பு கொள்ளவும் 272 (புதிய இல. 352) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (8389)

### புலமைப் பரிசில் பரீட்சை

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் கைநூல் சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் விற்பனைக்கு உண்டு. ஆக்கியோன்; ஆ. ந. இராசேந்திரன், Dip in - Accy, விலை ரூபா 40/- (8353)

### கோழிக்குஞ்சு விற்பனை

நன்கு பராமரிக்கப்பட்ட அய்லன் கறுப்பு, வெள்ளை ½ மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 23, பீச் றோட், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (8435)

### இறைச்சிக்கோழி

புறொயிலர் கோழி, சேவல், விருத்து சேவல் அடைவைக்கும் முட்டை, கோழித்தீன் விற்பனைக்கு உண்டு. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன் கொக்குவில். (8245)

### சேவல்

2 கிலோவிற்கு மேற்பட்ட சேவல்கள் தொகையாக விற்பனைக்குண்டு. கிறிஸ்மஸ், புதுவருடத்தை முன்னிட்டு விலை குறைக்கப்பட்டுள்ளது. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (8413)

### கோழிக்குஞ்சு விநியோகம்

புறொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) பேட்டுக் குஞ்சுகள். சேவற் குஞ்சுகள ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ்; பிரம்படி லேன், கொக்குவில். (8412)

### மொத்தமாக கலண்டர்-டயறிகள்

மெய்கண்டான் லீலா அஷ்டலக்ஷ்மி இரகுநாதையர், திருக்கணித, அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர் டயறிகள், பல டிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு. மக்மிலன் புத்தகசாலை, இல 3. பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C-954)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: அரசு நூலகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம், (C/807)

## தேவை

லலிதா ஜூவல்லறி ஸ்தாபனத்தில் கடமையாற்றுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பெண்பிள்ளை தேவை. வரும்போது உங்கள் பெற்றோருடன் வரவும். (8437)

யாழ்ப்பாணம் (Town) கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றிற்கு தேநீர் தயாரிக்கக்கூடிய 20 வயதுக்குட்பட்ட சப்ளையர் ஒருவர் தேவை. கடையில் தங்கக் கூடியவராக அல்லது அண்மையில் வசிப்பவராக இருத்தல் நன்று சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும் விபரங்களுக்கு நேரில் வரவேண்டிய முகவரி: சாம்பவீஸ், 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (8430)

### தாதி பயிலுனர் தேவை

புதிதாக ஆரம்பித்துள்ள Medical Clinics (I) ஆலடி காரைநகர். (II) மூளாய் வீதி வட்டுக்கோட்டை ஆகியவற்றிற்கு தாதி பயிலுனர் தேவை. தொடர்பு:- Dr. P சொர்ணலிங்கம், மூளாய் றோட், வட்டுக்கோட்டை. (8429)

### தவறிவிட்டன

அருளானந்தம் கௌசலாதேவி, அருளானந்தம் ஆனந்தராசா ஆகிய பெயர்களுடைய பாடசாலைச் சான்றிதழ்கள் (School Certificates) கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் 23-12 88 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (8510)

நாகலிங்கம் சோதிலிங்கம் ஆகிய எனது இல 67031407V உடைய அடையாள அட்டை 24-12-88 இல் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (8433)

ஆழ்வான் பூதத்தம்பி ஆகிய எனது அடையாள அட்டை இல581663z10V 5-12-88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அடையாள அட்டையிலுள்ள விலாசத்திற்கு அனுப்பியோ அல்லது உதயன் அலுவலகத்திலோ ஒப்படைக்கவும் (8400)

### முக்கிய அறிவித்தல்

அரிசி சீயக்காய், கோப்பி மற்றும் நவதானியம் என்பன உடனடியாக மக்கள் நலன் கருதி அரைத்துக் கொடுக்கப்படும். வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம் மற்றும் விற்பனைக்கும் உண்டு. வியாபாரிமார்களுக்கு சலுகை வழங்கப்படும். காலை 8.00 மணியில் இருந்து மாலை 5 00 மணி வரை. தொடர்பு.- லிங்கம் மில், 57, டேவுண் றோட், நீராவியடி, யாழ்ப்பாணம். (8434)

### சுஜேரா ரவல்ஸ்

போனியோ (Brunei), தைவான் (Taiwan) ஆகிய இரு நாடுகளுக்கும் சகல தரப்பு வேலையாட்கள் தேவையாக இருக்கிறது. இந்நாடுகளுக்கு வேலைக்குச் செல்ல விரும்புவோர் தாமதியாது தைமாதம் 4ஆந் திகதிக்கு முன்னர் சுஜேராஸ் ஸ்தாபனம், No 21, வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/985)

## வகுப்புகள்

சகல வயதினர்களுக்கும், எல்லாத் தரத்திற்கும் பிரெஞ்ச் வகுப்புகள் 04.01.89 புதன் கிழமை புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு:- யாழ் பிரெஞ்ச், நட்புறவுச் சங்கம் Alliance Francaise De Jaffna 130, 1st Cross Street, Jaffna. (8419)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்; Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்.) (C/945)

### பேக்கறி வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள பேக்கறி வாடகைக்கு விடப்படும். உடனே தொடர்பு கொள்ளவும்; பஸ்ரியன் பேக்கறி மானிப்பாய். (8507)

### ஜெனெறேட்டர் வாடகைக்கு

25 K V A 3 Phase ஜெனெறேட்டர் வாடகைக்குக் கொடுக்கப்படும். கந்தோர் நேரத்தில் தொடர்பு கொள்ளவும்; Peppans Organisation, 846 K. K. S. Road, Jaffna. (மில்க்வைற் ஸ்தாபனத்துக்கு முன்னால்) (8505)

# பருவ மழை தவறியதால் விவசாயிகள் பெரும் பாதிப்பு

சுன்னாகம் டிச 28

பருவமழை பெய்யத் தவறியுள்ளதால் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தால் எதிர்வரும் காலத்தில் எதிர் பார்த்த பயனைப் பெறமுடியாது போகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நெற்பயிருக்குப் போதுமான அளவு நீர் கிடைக்காததால் நெல் உற்பத்தியிலும் பெரும் வீழ்ச்சி ஏற்படுமெனக் கூறப்படுகிறது.

ஏனைய சிறு பயிர்களுக்கான பண்பாட்டு வேலைகளும் மழை இல்லாத காரணத்தால் விதம்பிதம் அடைந்துள்ளன. (ச-27)

உள உடல் ரீதியாக பாதிக்கப்பட்டோர்

## உளவளத்துணை மூலம் சாதாரண பிரசைகள் ஆக முடியும்

யாழ்ப்பாணம், டிச 28

''தற்போதைய சூழ்நிலை காரணங்களினால் உள உடல் ரீதியாகப் பாதிப்படைந்தோர் உளவளத் துணை மூலம் திரும்பவும் சமூகத்தின் ஆரோக்கியமான, சாதாரண பிரசைகளாக நடமாட முடியும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்கள் காரணமாக உள உடல் ரீதியாகப் பாதிப்படைந்த மக்களுக்கு சேவையாற்றும் பொருட்டு ''சாந்திகம்'' என்ற உளவளத் துணை நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அந்த வைபவத்தில் அதன் நிர்வாகிகள் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், ''இந்நிலையத்தின் சேவையில் நீண்டகால அனுபவமுள்ள பயிற்றப்பட்ட உளவளத்துணையாளர்களும், வைத்திய நிபுணர்களும், வெளிநாட்டில் உளவளத் துறையில் பயிற்சி பெற்ற வல்லுனர்களும் அடங்குவர்.

நோயாளர்களைப் பொறுத்தவரை அண்மைச் சம்பவங்களினால் பாதிப்புக்குள்ளாகிய இளைஞர்களும், போதை வஸ்து, மது போதையால் தாக்கப்பட்டு விடுதலை பெறமுடியாதவர்களும், குடும்பப் பிரச்சினை, பாலியல் ரீதியாக உள,உடல் பாதிப்படைந்தவர்களும் ஏற்கனவே இந்த நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்படித் தெரிவித்தனர்.

இன, மத, மொழி சார்பற்று, சேவை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு இலவசமாக இயங்கிவரும் இந்த நிலையம் இலக்கம் 21, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ளது.

இந்த நிலையத்தின் தலைவராக டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியனும், உதவித் தலைவராக வண. எஸ். எம் செல்வரத்தினமும் கடமையாற்றுகின்றனர். (இ-சி)

## சங்கரத்தை ஐக்கிய இளைஞர் கழகம்

சங்கரத்தை ஐக்கிய இளைஞர் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் செல்வன். ஏ. எம்: பிரபாகரன், தலைமையில் நடைபெற்றது.

1989 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தர் தெரிவு இடம்பெற்றது.

பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்- செல்வன்: வசந்தசீலன், உபதலைவர்- செல்வி: சசிகலா, செயலாளர்- செல்வன்: சண்முகானந்தன். உபசெயலாளர்- செல்வி: சுகந்தினி, பொருளாளர்- செல்வன்; கஜன் விளையாட்டுப் பொறுப்பாளர்: செல்வன்: தவநிருபன், பெண்கள் விளையாட்டுப் பொறுப்பாளர்- செல்வி: ரோகிணி.

போஷகர்கள்- திரு. நா. ஜெயரஞ்சிதன், திரு ஆ. திருஞானசம்பந்தர்.

ஆலோசகர்கள், செயற்குழு, உறுப்பினர்கள், கணக்குப் பரிசோதகர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

## விதியின் மோசமான நிலை

நீர்வேலியிலிருந்து அச்செழுவுக்குச் செல்லும் பாதை படு மோசமான நிலையில் காணப்படுகின்றது.

விவசாயிகள் உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வதில் பெரும் சிரமம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (இ-72)

## சுடப்பட்டார்

புதுக்குடியிருப்பு ஆனந்தபுர வாசியும் மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்டவருமான ஒருவர் சந்தேகத்தில் சுடப்பட்டு மரணமானார்.

இவர் கிறிஸ்மஸ் தினம் இரவு மாதா கோயிலுக்குச் சென்று மணி அடித்து விட்டுத் திரும்பி வந்து முகாமுக்கு அருகாமையில் பதுங்கிய போது சுடப்பட்டார் என அறியப்படுகிறது. (இ-92)

## யாழ். இந்து மகளிர் கல்லூரி

## ஆண்டு 6 பிரவேசம்- 1989

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் மேற்படி ஆண்டுக்கு பிரவேசம் கிடைத்த மாணவிகளின் பெற்றோர் (28-12-88) இன்று காலை 9.30 க்கு கல்லூரிக்காரியாலயத்தில் நடைபெறும் கூட்டத்திற்கு சமுகமளித்து அனுமதிக் கடிதத்தைப் பெற்றுச் செல்லும் படிகேட்டுக்கொள்ளுகின்றோம்.

- அதிபர்

Jaffna Hindu Ladies College.

(C-537)

# கற்சிலைமடுவில் கைதான எழுவரும் மாங்குளம் முகாமில்

கற்சிலைமடு கிராமத்தில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது கைதான ஏழு பேர் தொடர்ந்து மாங்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

வே. ரவீந்திரன், இ. சந்திரன், வே. மோகனதாஸ்,வே துளசிநாதன், நா. கிருபாகரன், சி. சிவராசா, ம. ரவிச்சந்திரன் ஆகியோரே முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

ஆகஸ்ட் மாதத்தில் கைது செய்யப்பட்ட இவர்கள் ஒட்டுசுட்டான் முகாமில் வைக்கப்பட்டிருந்து இப்போது மாங்குளத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களில் குடும்பஸ்தர்களும் அடங்குகின்றனர். (ஒ 113)

# 1989ஆம் ஆண்டுக்கான பொது விடுமுறைகள்

மானிப்பாய்,டிச.28

1989ஆம்ஆண்டுக்கான அரசாங்க பொது விடுமுறைகள் பின்வருமாறு;

ஜனவரி 14 (சனிக்கிழமை) தமிழ்த் தைப் பொங்கல் தினம்.

ஜனவரி 21 (சனிக்கிழமை) துருது பூரணை போயா தினம்.

பெப்ரவரி 4 (சனிக்கிழமை) தேசிய தினம்.

பெப்ரவரி 20 (திங்கட்கிழமை) நவம் பூரணை போயா தினம்.

மார்ச் 6 (திங்கட்கிழமை) மகா சிவராத்திரி தினம்.

மார்ச் 21 (செவ்வாய்க்கிழமை) மெதின் பூரணை தினம்.

மார்ச் 24 (வெள்ளிக்கிழமை) பெரிய வெள்ளிக்கிழமை தினம்.

ஏப்ரல் 13 (வியாழக்கிழமை) சிங்கள, தமிழ் புதுவருட நாளுக்கு முந்திய தினம்

ஏப்ரல் 14 (வெள்ளிக்கிழமை) சிங்கள, தமிழ் புதுவருட தினம்.

ஏப்ரல் 20 (வியாழக்கிழமை) பக் பூரணை போயா தினம்.

மே 1 (திங்கட்கிழமை) மேதினம்.

மே 7 (ஞாயிற்றுக்கிழமை) ஈதுல்பிதர் ரம்ஸான் பெருநாள் தினம்.

மே 20 (சனிக்கிழமை) வெசாக் பூரணை போயா தினம்.

மே 21 (ஞாயிற்றுக்கிழமை) வெசாக்பூரணை போயா நாளுக்கு மறு தினம்.

மே 22 (திங்கட்கிழமை) தேசிய வீரர்கள் தினம்.

ஜூன் 18 (ஞாயிற்றுக்கிழமை) பொசன் பூரணை போயா தினம்.

ஜூலை 13 (வியாழக்கிழமை) ஈதுல் அல்ஹாஹஜ்ஜுப் பெருநாள் தினம்.

ஜூலை 18 (செவ்வாய்க்கிழமை) எசல பூரணை போயா தினம்.

ஆகஸ்ட் 16 (புதன் கிழமை) நிக்கினிபூரணை போயா தினம்.

செப்ரெம்பர் 14 (வியாழக்கிழமை) பினை போயா தினம்.

அக்டோபர் 13 (வெள்ளிக்கிழமை) மீலாதுன் நபி (நபிகள் நாயகம் பிறந்த தினம்)

அக்டோபர் 14 (சனிக்கிழமை) வப் பூரணை போயா தினம்

அக்டோபர் 28 (சனிக்கிழமை) தீபாவளிப் பெருநாள் தினம்.

நவம்பர் 12 (ஞாயிற்றுக்கிழமை) இல் பூரணை போயா தினம்.

டிசம்பர் 12 (செவ்வாய்க்கிழமை) உந்துவப் பூரணை போயா தினம்.

டிசம்பர் 25 (திங்கட்கிழமை) நத்தார் தினம். (ச-90)

## ஆலயங்கள் அமைத்து சைவத்தை வளர்க்க வேண்டும்

மண்டைதீவு, டிச. 28

நம் முன்னோர்கள் ஆலயங்கள் அமைத்து இந்து சமயத்தை வளர்த்து வந்தார்கள்.

அவர்களைப் பின்பற்றி சைவ இளைஞர்களும் இந்து மதத்தை வளர்க்கப் பாடுபடவேண்டும்.

மண்டைதீவு சைவ இளைஞர்கள் திருமுறைக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு தலைமை வகித்து பேசும் பொழுது ஓய்வு பெற்ற அதிபர் திரு.க மாணிக்கலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

'சைவ இளைஞர்களின் உள்ளங்களில் இறை சிந்தனை இருக்க வேண்டும்.

இந்து சமயத்தின் சிறப்புக்களையும் பெருமைகளையும் தெரியாதவர்கள் இன்று நம் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்களுக்கெல்லாம் இந்து சமயச் சிறப்புக்களை தெரியப்படுத்த நாம் முன்வரவேண்டும்' என்றார்.

கழகச் செயலாளர் திரு.என். விஜயசுந்தரம் பேசுகையில், கழகம் ஆரம்பித்த ஒரு வருட காலத்தில் இப் பகுதியில் பலசைவத்தொண்டுகளை கழகம் செய்து முடித்து இருக்கின்றது எனக் கூறினார். (ச-88)

## றெனியின் பாஸ்போர்ட்டை மீளப் பெற முயற்சி!

கொழும்பு, டிச 28

முன்னாள் நிதியமைச்சர் திரு. றொனி டி மெல்லுக்கும் அவரது மனைவிக்கும் வழங்கப்பட்டுள்ள ராஜதந்திரிகளுக்கான பாஸ்போர்ட்டுகளை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன;

மேற்படி பாஸ்போர்ட்டுகளை மீள ஒப்படைக்கும்படி குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் திரு. எம். பி. ரட்ணுயக்கா, கடிதம் மூலம் திரு. றொனி டி மெல்லுக்கு அறிவித்தல் விடுத்திருக்கிறார்.

திரு. றொனி டி மெல்லுக்கும் அவரது பாரியாருக்கும் கடைசியாக 1986 ஜனவரியில் இராஜதந்திரிகளுக்கான பாஸ்போர்ட் வழங்கப்பட்டிருக்கிறது. அவை இன்னும் நான்கு வருடங்களுக்குச் செல்லுபடியாகும். (உ)

# இயேசு பெருமான் மனித மீட்புக்காகவே மண்ணில் அவதரித்தார்

சுன்னாகம், டிச. 28

இயேசு பெருமான் மனித மீட்புக்காக மண்ணில் அவதரித்தார்

அவர் தன்மேல் அன்பு வைப்பவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கின்றார்.

உள்ளத்திலே சமாதானம் மலர்ந்தாலொழிய நாட்டிலும் சமுதாயத்திலும் சமாதானம் ஏற்படமாட்டாது.

ஏழாலை தெற்கு திருச்சபையில் நடைபெற்ற விசேட நத்தார் ஆராதனை வைபவத்தில் அருளுரை ஆற்றும்பொழுது பிஷப். டி. ஜே அம்பலவாணர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது; 'தாழ்மை உருவாகப் பிறந்த பாலனின் அவதாரம் எம்மைத் தாழ்த்தி உண்மைச் சமாதானத்தைப் பெற வழி காட்டுகிறது.

எமது உள்ளத்தில் உருவாகியுள்ள போராட்டம் அகல வேண்டுமாயின் பாலனனவர் எமது உள்ளங்களில் பிறக்க வேண்டும்.

போக்கிலும் வரத்திலும் பாதுகாத்து ஆச்சரியமாக வழிநடத்தும் இறைவனே எமக்குப் புகலிடமும் ஆதாரமும் தருபவர்.'

இப்படி அவர் கூறினார். (ச- 27)

# நாவாந்துறையில் புதுவருடக் கொண்டாட்டங்கள்

குருநகர், டிச. 28

நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னிட்டு நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையம் உதைபந்தாட்டம். கலைநிகழ்ச்சிகள், புதுவருட விருந்துபசாரம் ஆகியவற்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு சிநேகபூர்வமான உதைபந்தாட்ட நிகழ்ச்சி சென். மேரிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

உதைபந்தாட்ட நிகழ்ச்சியில் யாழ். உதைபந்தாட்ட லீக்கைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

30ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 4மணிக்கு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். [illegible]

இடம்பெறும்.

31ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு புதுவருட விருந்துபசாரம் நடைபெறுவதுடன் நத்தார், புதுவருடக் கொண்டாட்டங்கள் நிறைவடையும். (ச-51)

## ஏமாற்றத்துடன் திரும்பினர்

கோப்பாய் வடக்கிலிருந்து மீளக் குடியமர்வுக்கு வழங்கப்படும் நிவாரணப் பணமான ஆயிரம் ரூபாவைப்பெறுவதற்கு வங்கிக்கு சென்றவர்களில் சிலருக்கு கிராமசேவையாளரினால் குறிக்கப்பட்டிருந்த பதிவு இலக்கமும் வங்கியில் கொடுக்கப்பட்டிருந்த பதிவு இலக்கமும் வேறுபட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இதன் காரணமாக நிவாரணப் பணத்தைப் பெற முடியாது இவர்கள் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-72)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் 2150 வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது. கேள்விகள் 'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்ற விலாசத்திற்கு 30-12-88ஆந் திகதிக்கு முன்னர் நேரடியாகச் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 2/- செலுத்தி தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்.

27 - 12 - 88
ஊர்காவற்றுறை. (C/996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் உளம் கனிந்த
★ புதுவருட நல்வாழ்த்துக்களை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



## 'ஷப்ரு' தரும் புதிய வட்டி விதங்களை

## கூர்ந்து நோக்குங்கள்!

## ஆகா! பிரமாதம் பரமதிருப்தி என்றே ஆனந்திப்பீர்கள்!!

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1.791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ச. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B. (Lond.) முகாமைப் பணிப்பாளர்

திரு ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond.) பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி,
B A. (Hons)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும்
அபரிமிதமான வளர்ச்சியும்
உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை
உறுதிப்படுத்துகின்றன.
வங்கியியலிலும் நிதியியலிலும்
சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள
எமது முகாமையாளர்களின்
நிர்வாகத்திறன்
அதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான
வட்டி விதங்களுடன்
பல்வேறு விசேட சலுகைகளையும்
வசதிகளையும் வழங்குகின்றது.
உங்கள் தேவைக்கேற்ப வட்டியை
மாதாந்தம், காலாண்டில்
அல்லது முதிர்ச்சியில்
பணமாகவோ, காசோலையாகவோ அன்றி
வங்கிக்கணக்கூடாகவோ
பெறறுக்கொள்ளலாம்.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே
எமது பிரதான நோக்கமாகையால்
அவர்களின்
கோரிக்கைகளையும் தேவைகளையும்
சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து
திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

## SHABRA UNICO FINANCE LIMITED

61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

யாழ் முகவர்: 207. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலை

1989 ஆம் ஆண்டு 1 ஆம் தவணை
ஆரம்பம்
முன்னர் அறிவிக்கப்பட்டபடி
02 - 01 - 1989

- அதிபர்

(C-539)


### வருடாந்தப் பொதுக் கூட்டம்

குருநகர் டிச 28

யாழ் அடைக்கல அன்னை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம், தாராக்குளம் வீடமைப்பு பகுதியில் உள்ள நிலையக் கட்டிடத்தில் 31 ஆம் திகதி சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு நடைபெறும்

நிலையத் தலைவர் திரு. சி ஐயாத்துரை தலைமை வகிப்பார். (ச-51)


**For your requirements of following quality fluid control engineering products.**

**Direct Importers, Distributers, Manufacturers Agent, Engineering Contractors and Suppliers,**

Please contact:-

## Ruby International Associates

First floor, 353 1/3, Old Moor Street,
Colombo-12.
Telephone: 540952, 546506 — Telex: 21583 CE.

**EX-STOCK AVAILABLE IN**

1. All types of cast iron gate valves, Globe valves, Ball valves, Non Return valves. Plug valves, etc, etc.
2. All types brass/Bronze gate valves, Globe valves, Ball valves, Swing Check valves etc.
3. Boiler Accessories such as Steam pipes/Fittings. Steam Traps, Pressure reducing valves, Safety relief / Control valves, Flanges, Bends, Strainers etc, etc.
4. All types of welding electrodes such as M. S (M. T. 12-Chinese) Cast Iron (Ferroloid) Stainless Steel (Tokuden - Japan) Hard Facing (Afrox / S. Africa) and Cable, welding holders etc, etc.

Also we undertake orders for your engineering requirements on import and supply basis.

(8392)






## ★ சவூதிஅரேபியா ★

சவூதி அரேபியா பிரதம துறைமுகத்தில் இழுவைப் படகுப் பிரிவில (Tin Boat Division) பணியாற்றுவதற்குக் கீழ் காணும் பதவியாட்கள் அவசரமாகத் தேவைப்படுகிறது அடுத்த ஒரு வாரத்தில் கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடைபெறும் அதைத் தொடர்ந்து இரு வாரங்களில் பயண ஒழுங்கு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| கார் மெக்கானிக் | 1 ஆள் | 450 றியால் |
| Chief mate | 4 பேர் | 800 - 1000 றியால் |
| Boatswains (போசன்) | 2 பேர் | 650 றியால் |
| Maintenance Engineer | 2 பேர் | |
| Electrician | 2 பேர் | |
| Shore Mechanic (Work Shop) | 2 பேர் | |
| Tug Mechanics | (10 பேர்) | 450 றியால் |
| Skippers | 10 பேர் | 800 - 900 றியால் |
| A. B | (10 பேர்) | 400 றியால் |

1. உணவுக்காக 200 றியால் மாதம் தோறும் வழங்கப்படும்.
2. இருப்பிடம் இலவசம்.
3. 2 வருட ஒப்பந்தம்.

கப்பல் அனுபவம் உடையவர்கள் மட்டும்
உடனடியாக விண்ணப்பிக்கவும்

அத்துடன்

கனடா, அவுஸ்திரேலியா, இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள

**S. P. ANTON**

(C-987)


## "மில்க்வைற்"
### தாயாரை நினைவு கூருகின்றோம்



''பத்து ஆசிரியர் ஒரு குருவுக்குச் சமம்.
நூறு குருக்கள் ஒரு தந்தைக்குச் சமம்
ஆயிரம் தந்தையர் ஒரு தாய்க்குச் சமம்''

— மனு

— மில்க் வைற் குடும்பத்தினர்,
யாழ்ப்பாணம்.

[C/938)

## விண்ணக வாழ்வின் ஓராண்டு நிறைவு இதய அஞ்சலி



மண்ணுலகம்:
23 - 05 - 1914

●

விண்ணுலகம்:
09 - 01 - 1988

**அமரர் அ. க. துரையப்பா**
[வடலியடைப்பு, ரக்ரர் துரையப்பா]

திதி: 28 - 12 - 1988

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது
நிலைத்து நிற்கும் அன்புத் தந்தையே!
எமக்கு நல் வழி காட்டி அன்பு
அறநெறி பண்பு பாசத்துடன்
வளர்த்த தெய்வமே!
இடைநடுவில் எங்களைக் கண்ணீர்க்
கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு
இறைவனுய் இணைந்து விட்டீரோ!

ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய வடலியடைப்பு புடுருவை ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானைத் தினமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!
நித்தம் நித்தம்
உங்கள் பிரிவால் வாடும்
அருமை மனைவி, மகன், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி.

சங்கானை மேற்கு.
பண்டத்தரிப்பு. (8499)

## முதலாம் வருட நினைவு நாள்



**திரு. த. சிவரத்தினம்**
(யாழ் மாவட்ட சமாதான நீதிவான்
புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் மடியில்: |
|---|---|
| 09 - 12 - 1938 | 09 - 01 - 1988 |

எங்கள் குடும்பத்தை அன்புடன் வழி நடத்திய பாசதீபம் அணைக்கப்பட்டு விட்டது. எங்களை வழி நடத்த ஒருவரும் இல்லாமல் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அருமை மனைவி, மகள்,
[illegible]

(8501)

### சாரணர் சிரமதானம்

சுன்னாகம் டிச, 28

காங்கேசன் துறை சாரணர் மாவட்டத்தின் பத்தாம் ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தை முன்னிட்டு மானிப்பாய்த் தொகுதியின் மல்லாகம் பிரிவைச் சேர்ந்த சாரணர், சுன்னாகம் மயிலணி முருக மூர்த்தி ஆலயத்தில் தமது முதலாவது சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

மல்லாகம் பிரிவின் சாரண உதவி மாவட்ட ஆணையாளர் திரு. திருச்சி நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியில் மயிலணி சைவ மகா வித்தியாலயம், ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலை ஆகிய சாரணர் குழுக்களும், மற்றும் சாரண உதவி மாவட்ட ஆணையாளர்களான திரு. இ. இராஜ்குமார் (மானிப்பாய்த் தொகுதி), திரு. சி. காசிநேசன் (சுன்னாகம் பிரிவு), திரு. செ. செந்தில்வேல் (மானிப்பாய் பிரிவு), ஆகியோரும், சுன்னாகம் பிரிவு மாவட்டகுருளைச் சாரணத் தலைவர் செல்வி. எஸ். இரஞ்சிதமலரும் பங்குபற்றினர். (ச-27)

## துணுக்காய் இராணுவமுகாம் விஸ்தரிப்பு

மாங்குளம், டிச 28

துணுக்காய் இராணுவ முகாமை மேலும் விஸ்தரிக்கும் நோக்கமாக பற்றைகள், காடுகள் துப்புரவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

100 க்கு மேற்பட்ட பொது மக்கள் துப்புரவு செய்யும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு இந்திய இராணுவம் 5 கிலோ மாவும், 1 போத்தல் மண்எண்ணெயும் வழங்குவதோடு, உணவும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது (ச-94)


## BECON
### கல்வி நிலையம் - யாழ்ப்பாணம்

**B. A வகுப்பு 1988**

அரசறிவியல்

● **திரு. தமீம்**

மீட்டல் - வினவிடை வகுப்பு
(மூன்று பகுதிகளும் முடிக்கப்படும்)
கட்டணம்: ரூபா 100/-

**ஆரம்பம்: 28-12-88**
புதன் 8. 00 a. m.

● G. A. Q வகுப்புகளும்
நடைபெறுகின்றன.

(8500)


## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**ம. யூட்சக்காரியா [சந்திரா]**

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 28 - 12 - 1970 | 27 - 11 - 1988 |

பொங்கி வரும் பெருநிலவே எம் சந்திரா!
ஆறுத்துயரில் எம்மை ஆழ்த்தினுய்
மீளாத் துயில் கொண்டாய் எம் மருமகனே
நாளொரு வண்ணமுமாய் நீ வளர்ந்தாய்
நமைத்தவிக்க விட்டு தனியாகச் சென்றுயே
நல்லோர் இவ்வுலகில் இருப்பாரென்னின்
இவையெல்லாம் நடந்திடுமா?
இந்நானிலத்தில்
எம்மைச் சுற்றி வலம் வருவாய் எம் மகனே!
நீ எமைப் பிரிந்தாலும் உன் நினைவு
என்றும் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

அப்பம்மா, அத்தைமார், மாமன்மார்,
சித்தப்பா, சித்தி, மச்சான்மார்,
மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார்.
8506)


## சரியான நிறை தவறுது காட்டும்
# யூனியன்
## மேடைத் தராசுகளை
# சிங்கர்
## விநியோகிக்கிறது!



யூனியன், சரியான நிறையைத் தவறுது காட்டுபவை. உலகப் புகழ் வாய்ந்த சிங்கர் நிறுவனம் இந்த உன்னத தராசுகளின் ஏக விநியோகத்தைப் பொறுப்பேற்றுள்ளது.

யூனியன் 250 கிலோ மேடைத் தராசுகள் இப்பொழுது மேலும் நவீனத்துவம் பெற்றுள்ளன, வெப்பத்திற்குத் தாக்குப் பிடிக்கும் நுட்ப உறுப்புகளும் நீண்ட காலம் உழைக்கும் திறனும் கொண்ட அவை இலங்கை அளவை நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரையைப் பெற்றவை.

சகல சிங்கர் விற்பனை நிலையங்களிலும் வாங்கலாம்.

எடை அளவெல்லை
அளவுத் திறன் 250 கி.கி. அளவுக் கூறுகள் 10 கி. கி x 100 கி

நீங்கள் தவணைக் கொடுப்பனவு அடிப்படையிலும் வாங்கலாம்.

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

விலை: ரூ. 11,215/-

Minds/SA/5

**சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமொழி**

**குறள்:**

பேதைமையு ளெல்லாம்
　　　　பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

**பொருள்:**
ஒருவனுக்கு பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை. தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததால் தன் விருப்பத்தைச் செலுத்தலாகும்.


# உதயன்

உண்மை - நிர்ச்சாமை - ஐக்கியம்

இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

28-12-1988　த. பெ இல 83


## மலையகத்தில் ஊர்காவல்

மலையகத்தில் தமிழ் இளைஞர் படை ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகச் செய்தி வெளியாகி உள்ளது. அது தோட்டப் பகுதிகளில் ஊர்காவல் படையாக இயங்க இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து தமிழ்த் தொழிலாளர் வாழும் தோட்டப் பகுதிகளில் வெளியார் புகுந்து வன்முறையில் ஈடுபட்டனர். அதனாலேயே அவசர அவசரமாகத் தொண்டர் படை நிறுவப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தேர்தல்களுக்குப் பிந்திய வன்முறைகள், இனக்கலவரங்கள் வழமையான நிகழ்ச்சிகள் என்பது சரித்திரம்.

ஆனால், வன்செயல்கள், மிரட்டல்களுக்கு மத்தியில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் என்பதாலோ என்னவோ, வழமைப் பிரகாரம் பெரிய அளவில் வன்செயல்கள் வெடிக்கவில்லை.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆர். பிரேமதாச தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஆற்றிய உரை வன்செயல்களுக்குத் தூபம் இடாமல் தடுத்தது என்று சொல்வாரும் உளர்.

காரணம் எதுவோ தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் கலவரம் தவிர்க்கப்பட்டது மக்களைப்பொறுத்தமட்டில் அதிர்ஷ்டவசமானதாகும். அவர்களுக்கு நிம்மதியையும் தந்தது.

எனினும் மலையகத்தில் தோட்டப் பகுதிகளில் தேர்தலுக்குப் பின் வெளியார் வந்து வன்செயல்கள் புரிவது கவலைக்குரிய விடயமாகும்.

அப்புத்தளைப் பகுதியில் தமிழ் இளைஞர்கள் மூவரின் தலைகள் சீவப்பட்டுக் கொலைகள் செய்யப்பட்டது. மலையகத்தில் வன்செயல்கள் தடுக்கப் படாவிட்டால் மோசமடையலாம் என்பதையே எடுத்துக் காட்டியது எனலாம்.

எனவே, மலையகத் தமிழ் மக்களைப் பாதுகாக்க ஊர்காவல் படை ஒன்று நிறுவப்படுவது காலத்தின் தேவையாகும்.

புதிதாக உருவாக்கப்படும் ஊர்காவல் படையில் சேரும் இளைஞர்களுக்கு மாதாந்தச் சம்பளமும், இதர வசதிகளும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் வாழும் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கென்று உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டது போன்று மலையக ஊர்காவல் படையினருக்கும் ஆயுதங்கள் கொடுக்கப்படுமா என்பது குறித்து இன்னும் தெளிவுபடுத்தப் படவில்லை.

மலையகத் தோட்டப் பகுதிகள் எப்போதுமே பதற்றம் ஏற்படக்கூடிய, தமிழ் மக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய இடங்களாக விளங்குகின்றன: ஆகையால் அவர்களின் பாதுகாப்புக் கருதி இப்போது நிறுவப்படும் ஊர்காவல் படை மேலும் பலப்படுத்தப்பட்டு நிரந்தரமாக்கப்படுதல் அவசியம்.

### புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது தேர்தல்

# கம்யூனிஸ்ட் அல்லாத வேட்பாளரும் போட்டியிட சோவியத் அரசாங்கம் அனுமதி!

மாஸ்கோ, டிச. 27

சோவியத் யூனியனின் புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் தேர்தல் வருகிற ஆண்டு மார்ச் மாதம் நடைபெற உள்ளது.

அதற்கான நியமனப் பத்திரங்களை இம் மாதம் 30 ஆம் திகதி முதல் தாக்கல் செய்யலாம் என்று சோவியத் அரசு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தக் கொள்கையின் இறுதிக் கட்டமாக புதிய நாடாளுமன்றம் அமைய இருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை கோர்பச்சேவின் புதிய அரசியல் சீர்திருத்தம் அறிமுகம் செய்கிறது.

இதற்கிணங்க, புதிய நாடாளுமன்றமே முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்யும். இதுவரை காலமும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினால் அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்பட்டனர்.

கோர்பச்சேவ் அறிமுகப்படுத்தியுள்ள தேர்தல் சீர்திருத்தத்தின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியினால் அங்கீகரிக்கப்படாத வேட்பாளர்களுக்கும் வாக்காளர் வாக்களிக்கலாம்.

புதிய நாடாளுமன்றத்தில் 250 எம். பிக்கள் இருப்பர். நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒருபங்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்படும். எஞ்சிய ஆசனங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுடன், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களின் வேட்பாளர்களும் போட்டியிட முடியும்.

சோவியத்தின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி வருகிற ஏப்ரலில் பதவி ஏற்பார்.

தற்போது பெயரளவிலான ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கோர்பச்சேவே முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக வருவார்.

### சோவியத்தில் 'மாபியா' பாணி நடவடிக்கை

மாஸ்கோ டிச 27

ஆர்மேனியா, அஸர்பைஜான் மாநிலங்களில் இன மோதல்களை தீவிரப்படுத்துவதில் மாபியா பாணி இயக்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

மாஸ்கோவில் அரச அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

ஆர்மேனியாவில் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். அஸர்பைஜானில் முஸ்லிம் மக்கள் வசிக்கின்றனர். (எ)

### ★ கலவரத்தின் எதிரொலி:

## ஆந்திரா மாநிலத்தில் தற்காலிக ஜனாதிபதி ஆட்சி ஏற்படுமா?

ஹைதராபாத், டிச. 27

விஜயவாடாவில் இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் ஆந்திரமாநில அரசுக்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

படுகொலைச் சம்பவத்தால் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்குக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தவிர்க்க ஆந்திரமாநிலத்தில் தற்காலிகமாக ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டுவரப் புதுடில்லி அரசு தீவிரமாக ஆலோசித்துவருவதாக பி. பி. சி. தெரிவித்தது.

சட்டசபையை இடைநிறுத்திவைத்து ஜனாதிபதி ஆட்சியை நடத்துவது. பின்னர் மீண்டும் சட்டசபையைக் கூட்டி மாநில அரசிடம் ஆட்சியை ஒப்படைப்பது - இந்த ரீதியில் மத்திய அரசு ஆலோசனைசெய்து வருகிறதாம்.

ஆந்திர மாநிலப் பிரச்சினை குறித்து மத்திய அரசு உயர்மட்டப் பரிசீலனை செய்வதாக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் அறிவித்திருக்கிறார்.

இதனிடையில் எம். எல. ஏ. மரணம்குறித்து ஆந்திர மாநில முதலமைச்சர் என். ரி. ராமராவ் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

எம். எல். ஏயின் மரணத்துக்கு மாநிலஅரசே பொறுப்பு ஏற்கவேண்டும் என்று மாநில இந்திரா காங்கிரஸ் கட்சி குற்றஞ் சாட்டியிருக்கிறது.

சட்டசபை உறுப்பினரின் மரணத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும்வகையில் மாநிலம் தழுவிய அடையாள வேலைநிறுத்தம் அனுஷ்டிக்கும்படி மாநில காங்கிரஸ் மக்களுக்கு இன்று அழைப்பு விடுத்தது.

இதேவேளை—

விஜவாடாவிலும் வேறு பல பகுதிகளிலும் விதிக்கப்பட்ட கால வரையறையற்ற ஊரடங்கு நேற்று நீடிக்கப் பட்டது.

பொலீஸ் துன்புறுத்தலில் இருந்து தன்னைப் பாதுகாக்கும்படி உண்ணாவிரதம் இருந்த சமயமே மோனரங்கராவ் என்ற எம்.எல்,ஏ. குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. (எ)

## பனமா விவகாரம்: புஷ் நிலைப்பாடு

வாஷிங்டன் டிச 27

பனமா அதிபர் ஜெனரல் நொறியாகோ சம்பந்தப்பட்ட றேகன் கொள்கையையே தொடர்ந்து கடைப் பிடிக்கப் போவதாக அமெரிக்காவின் புதிய அதிபர் ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

போதை வஸ்துக்கடத்தலில்ஈடுபட்டார் என்று கூறி ஜெனரல் நொறியாகோவை பதவியில் இருந்து விலகும்படி அமெரிக்கா நிர்ப்பந்தித்து வருவது தெரிந்ததே. (எ)

### ஆப்கனிஸ்தான்

## பதவி விலகும்படி நஜிப் அரசுக்கு பிரிட்டன் வேண்டுகோள்

தெஹ்ரான், டிச. 27

ஆப்கனில் இஸ்லாமிய அரசு ஒன்றை அமைக்க ஈரான் தொடர்ந்து உதவவேண்டும் என்று முக்கிய கெரில்லாக் குழுவின் தலைவரான பேராசிரியர் ரபானி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பேராசிரியர் ரபானி ஈரான் பிரதமரைச் சந்தித்து பேச்சுக்கள்நடத்தினார். அப்போதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை —

டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான காபூல் அரசு உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜிப்றிஹோ வேண்டுகோள் விடுத்திருக்கிறார்

ஆப்கனிஸ்தானுக்குள் சோவியத் துருப்புகள் பிரவேசித்த 9 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பிரிட்டிஷ் அமைச்சர் விடுத்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டது.

சகல தரப்பினரும் பங்குபற்றக்கூடிய அரசு ஒன்றை அமைக்க நஜிப் அரசு பதவி விலகுவது உதவும் என்றும் அமைச்சர் ஹோ தெரிவித்தார். (எ)

### ஆபிரிக்க - சீன மாணவர் மோதல்

பீகிங் டிச 27

இன வேறுபாடு காரணமாக ஆபிரிக்க மாணவருக்கும் சீன மாணவருக்கும் இடையே நான்கின் நகரில் மோதல் ஏற்பட்டது. முன்னரும் இப்படியானமோதல்கள் ஏற்பட்டு இருந்தன.

கறுப்பு நிற மாணவர் துன்புறுத்தப் படுவதாக ஆபிரிக்க மாணவர் முறைப்பாடு செய்து வந்திருக்கின்றனர். (எ)

## என்னைக் கொலை செய்ய மொஸாட் திட்டம் - அரபாத் தகவல்

ஹர்பாக். டிச. 27

இஸ்ரவேலிய மொஸாட் படை என்னைக் கொல்லத் திட்டமிட்டிருக்கிறது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் முன்கண்டவாறு தெரிவித்தார்,

ஜேர்மன் சஞ்சிகை 'ஸ்பீகல்' அரபாத்தின் பேட்டியை வெளியிட்டிருக்கிறது

அரபாத் அந்தப் பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது.

என்னைக்கொல்லும்படி மொஸாட் உளவுப் படைக்கு இஸ்ரவேலிய அரசு உத்தரவு வழங்கி விட்டது.

கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியலில் எனது பெயருடன் வேறு பலஸ்தீனிய தலைவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

மொஸாட் படை என்னைப் பின் தொடருகிறது. இது எனக்குத் தெரியும்.

என்னைக் கொல்லும் நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் பெஸ்ற் ஹிட்" என்று இஸ்ரவேலியர் பெயர் வைத்துள்ளனர்.

இப்படி அரபாத் தெரிவித்தார்.

### ஐவரின் சடலங்கள் மீட்பு

சண்டிகார், டிச 27

பஞ்சாபில் நேற்று முன்தினம் கடத்தப்பட்ட பஸ் பயணிகள் அறுவரில் ஐவரின் சடலங்கள் நேற்றுப் பிற்பகல் கண்டு பிடிக்கப் பட்டன.

அவர்களின் சடலங்களில் துப்பாக்கிக்குண்டுக் காயங்கள் காணப்பட்டன.

கடத்தப்பட்ட இன்னொரு பயணி காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

# பல் முரசு வியாதியைத் தீர்க்க பற்சிகிச்சை நிலையங்களை நாடுக

### யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 28

பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போது பல்முரசு வியாதி ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

மாணவர்கள் வருடத்தில் ஒரு முறையாவது பற்சிகிச்சை நிலையத்துக்குச் சென்று தமது பற்களைப் பரிசோதனை செய்வதன் மூலம் பல் முரசு வியாதியை முன் கூட்டியே அறிந்து அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கனகசபை பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது:-

'மாணவர்கள் மத்தியில் காணப்படும் பல் முரசு வியாதியைத் தீர்ப்பதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பின்வரும் பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள் நடைபெறுகின்றன.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

வேலணை மத்திய மகா வித்தியாலயம்.

றிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம்

ஆகிய சிகிச்சைநிலையங்கள் ஞாயிறு, அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களிலும் பாடசாலை விடுமுறை நாட்களிலும் காலை 8.30 முதல் 5.00 வரையும் பி. ப. 1 00 முதல் 3. 30 வரையும் நடைபெறும்.

சனிக்கிழமைகளில் காலை நேரத்தில் மாத்திரம் நடைபெறும்.

பரியோவான் கல்லூரி தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் 13 வயதுக் குட்பட்டோருக்கு மாத்திரம் சிகிச்சையளிக்கப் படும்.

பரியோவான் கல்லூரியில் வயதெல்லையின்றிச் சகல மாணவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

இச்சிகிச்சைகள் யாவும் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன.

அண்மையிலுள்ள ஏனைய பாடசாலை மாணவர்கள், தமக்குக் கிட்டவுள்ள ஓர் சிகிச்சை நிலையத்தில் வேண்டிய சிகிச்சையையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச)

## மனிதருள் கடவுள் போன்றவர் ஜே.ஆர்

### இப்படி ஒரு பாராட்டு

கொழும்பு, டிச. 28

மனிதருள் கடவுள் போன்றவர் ஜே ஆர்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் செயலாளர் டபிள்யு எம். பி பி. மெனிக்திவெல பாராட்டினார்.

திரு. ஜெயவர்த்தனவுக்கு ஜனாதிபதி மாளிகை ஊழியர்கள் [illegible] சாரம் அளித்துக் கௌரவித்தனர்.

'எமது ஜனாதிபதிக்கு கடவுள் தன்மைகள் உண்டு' என்று அவர் சொன்னார்.

திரு ஜெயவர்த்தன பதிலளிக்கையில் நகைச்சுவையாக,

"கடவுள் என்னைப் போன்று இருப்பின் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது"— என்று சொன்னார். (இ-எ)

### கோப்பாயில் தடுப்பு ஊசி

கோப்பாய், டிச. 28

கோப்பாய் வடக்கில் கோமாரி நோய் தடை ஊசி போடப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் உடன் தொடர்பு கொண்டு தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசியை ஏற்றும்படி கோப்பாய் விவசாயிகள், சங்கத்தலைவர் கோரி உள்ளார். (இ- 72)

## சனசமூக நிலையங்கள் சமூகத்தின் கண்கள்

மண்டைதீவு, டிச 28

சமூகத்தின் கண்கள் போன்றவை சனசமூக நிலையங்கள். அத்தகைய சனசமூக நிலையங்கள் சிறப்பாக செயல்பட்டு மக்களுக்கு உதவ வேண்டும்.

அல்லைப்பிட்டி மத்தி சன சமூக நிலையத்தின் பொதுக் கூட்டத்துக்கு தலைமை வகித்து பேசிய திரு. என். சச்சிதானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

சனசமூக நிலைய மண்டபத்தில் நடை பெற்ற இக் கூட்டத்தில் திரு. சச்சிதானந்தன் தொடர்ந்து பேசுகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றை சனசமூக நிலையங்களில் போடுவதோடு மட்டும் சனசமூக நிலையங்கள் இருந்து விடக் கூடாது இப்பகுதி மக்களின் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும்.

நீண்ட காலம் செயலிழந்து இருந்த இந்த சனசமூக நிலையத்தை புனரமைப்பு செய்து மீண்டும் மக்களுக்கு சேவை செய்ய வைத்து இருக்கின்றோம்

இந்த நிலையத்தை சிறப்பாக நடத்துவதற்கு இப்பகுதி மக்கள் ஆதரவு தரவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது (இ 88)

## ஒரே வீட்டில் அடுத்தடுத்து திருடர்கள் கைவரிசை

குருநகர், டிச. 28

கொக்குவில் கிழக்கு தலையாளி சபாபதி ஒழுங்கையில் தளையசிங்கம் என்பவரது வீட்டில் அடுத்து அடுத்து இரு தினங்கள் திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி 15 பவுண் நகைகளை ஆயுதம் ஏந்திய கொள்ளைக் கோஷ்டி மேற்படி வீட்டில் கொள்ளையிட்டுச் சென்றிருந்தது.

மறுநாள் 19ஆம் திகதி திங்கட்கிழமை இரவு ஜன்னல் கம்பியைப் பெயர்த்து உள்ளே நுழைந்த இன்னொரு திருட்டுக்கோஷ்டி வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்தி எவர்சில்வர் பாத்திரங்கள், உடுடைவகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் அனைத்தையும் சுருட்டிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. (ச- 51)

## உல்லாசப் பயணிகளை கவர்ந்து இழுக்க முயற்சி

இலங்கைக்கு மீண்டும் உல்லாசப்பயணிகளை வரவழைக்கும் முயற்சியில் உல்லாசப் பயணசபை ஈடுபட்டிருக்கிறது.

இதற்காக உலகநாடுகளிடையே பிரசார இயக்கம் ஒன்றை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக இலங்கை உல்லாசப் பயணிகள் சபைத்தலைவர் அஸ்கர் மூஸாஜி தெரிவித்தார்.

தென்பகுதியில் வன்செயல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து, சுமார் 10 ஆயிரம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை இலங்கையை விட்டுச் செல்லும்படி அரசு வேண்டுகோள் விடுத்தது தெரிந்ததே. (ஒ-எ)

### திருவெம்பாவை மனனப்போட்டி

கோப்பாய், டிச 28

கோப்பாய் குடைபண்டித சைவவிருத்தி சங்கத்தினால் இருபதுவயதுக்கு உட்பட்ட மாணவர்களிடையே திருவெம்பாவை மனனப்போட்டி நடத்தப்பட்டது.

## திருவலிவலம்வழிபடும் அடியார் இடர் தீரும்

யாழ்ப்பாணம் டிச, 28

சிவபெருமான் ஆண் யானையாகவும் உமாதேவியார்பெண் யானையாகவும் தோற்றியே ஓங்கார மூர்த்தியானஸ்ரீ விநாயகப்பெருமான் வர அருளினார்கள். மிக்க கொடையே வடிவானவர்கள் வாழும் திருவலிவலத்தை வழிபடும் அடியார்களின் இடர் எளிதில் நீங்கி விடும்.

யாழ் பிறவுண் வீதியிலுள்ள ஓர் இல்லத்தில் கடந்த 22 ஆம் திகதி வியாழனன்று பௌர்ணமி தினத்தில் நடைபெற்ற இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. கருணாகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "விநாயகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்கு இன்னல் தீர்ப்பார். ஆனால் அதே நேரத்தில் தம்மை வழிபடவில்லையே என்பதற்காக விருப்பு வெறுப்பும் கொள்ள மாட்டார். பானைவயிறும் ஆனைமுகமும் அவரின் அருள் வடிவமே" என்றார்.

கூட்டமுடிவில் ஒவ்வொரு மாதமும் தேவார விரிவு பற்றிய கலந்துரையாடல் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது. (இ)

### ஒளி விழா

மண்டைதீவு டிச, 28

மண்டைதீவு புனித பேதுருவானவர் இளைஞர் மன்றத்தினர், இன்று 28 ஆம் திகதிஇப் பகுதிப் பங்குத்தந்தை தலைமையில் ஒளி விழா நடத்துகிறார்கள். (இ-88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

28 - 12 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் (PROCESSING) செய்தல் இலவசம்
• சிறந்த வர்ண நிழற்படச் சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

### ஆயிரம் ரூபா நிவாரணம் பெறும்

# 6 ஆயிரத்து 70 குடும்பங்களின் பெயர்ப் பட்டியல்

## செயலகம் நேற்று வெளியிட்டது

யாழ்ப்பாணம், டிச, 28
மீளக்குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபா பெறும் 6 ஆயிரத்து 70 குடும்பங்களின் பெயர்ப் பட்டியல் செயலகத்திலுல் நேற்று வெளியிடப்பட்டது.

இந்தப் பட்டியலில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 691 குடும்பங்களும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 382 குடும்பங்களும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 306 குடும்பங்களும்-

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்தி 988 குடும்பங்களும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவைச் சேர்ந்த ஆயிரத்தி 941 குடும்பங்களும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 756 குடும்பங்களும் அடங்குகின்றன-

இவர்களுக்கான காசோலைகளும் பட்டியல்களும், இன்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ 5)

## இவ்வார இறுதியில் நிவாரணம் பெறுவோர்

யாழ்ப்பாணம், டிச 28
இவ்வார இறுதியில் மீளக்குடியமர்தல் நிவாரணம் பெறுவோர் விவரம் வருமாறு,—

மண்டைதீவைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு எதிர்வரும் 31ஆம் திகதி மக்கள்வங்கியின் யாழ ஸ்ரான்லி வீதிக்கிளையில் நிவாரணத் தெரிவுப் பணம் வழங்கப்படும்

இதே வங்கியில் முதலாம் திகதி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ மண்டைதீவு- 142
★ வேலணை கிழக்கு - 3
★ காரைநகர்கிழக்கு - 13

சுன்னாகம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 973 குடும்பங்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் நிவாரணம் வழங்கப்படும்.

அங்கு நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு.

★ சந்தரோடை- 384
★ ஏழாலை மேற்கு 404
★ உடுவில் தெற்கு 185

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 315 குடும்பங்களுக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையில் நிவாரணப் பணம் வழங்கப்படும்.

நிவாரணம் பெறுபவர்களின் பட்டியல்கள் கிராம சேவகர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே நிவாரணம் பெறுபவர்கள் வங்கிகளுக்கு வருவதற்கு முன் தத்தம் பகுதிகளிலுள்ள கிராமசேவகர்களிடம் சென்று தமது பெயருக்குரிய இலக்கம் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளும்படியும்,

பட்டியலில் இலக்கம் இல்லாதவர்கள் வீணாக வங்கிகளுக்கு வந்து அலைய வேண்டாமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (உ-ஐ 5)

## வலி மேற்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்ட போதிலும் 'டேர்பைன்' இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக அன்றைய தினம் மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனினும் இயந்திரம் நேற்றுத் திருத்தப்பட்டதையடுத்து இன்று மேற்கண்ட இடங்களுக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடாகி உள்ளது. மாலை ஆறு மணியளவில் இருந்து இரவு 9 மணிவரை மின்சாரம் வழங்கப்படும். (அ-10)

## ஆறுயிரம்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)
இரண்டாவது சாதனையாகும்.

1985ஆம் ஆண்டு தேர்தலில் கர்நாடகமாநிலத்தில் பெல்காம் தொகுதியில் போட்டியிட 301 வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

1984 தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிலும் பார்க்க இம்முறை தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களின் எண்ணிக்கை 2,836 அதிகமாகும். (உ-எ)

### "இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர்"

# நாளை நூல் வெளியீடும் கலை நிகழ்ச்சியும்

யாழ்ப்பாணம், டிச. 28
'இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர்' நூல் வெளியீடும் கலை நிகழ்ச்சியும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும்—

யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர், நுண்கலைத் துறைத் தலைவா பேராசிரியர் கா சிவத்தம்பி வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழகத் தலைவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சி எஸ். நச்சினார்க்கினியர் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவர்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

ஓய்வுபெற்ற அதிபர் திரு மா ஆனந்தர் பண்டிகர், யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

கலை நிகழ்ச்சிகளில் இணுவையூர் சின்னத்தம்பிப் புலவரின் "பஞ்சவன்னித் தூது" நாட்டிய நாடகம் இடம் பெறும். (இ)

## மின் கோபுர....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இன்று ஆரம்பமாகின்றன

இக்கோபுர திருத்த வேலைகளைக் கவனிப்பதற்கென மின் அத்தியட்சகர் ஒருவர் உட்பட பல ஊழியர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து மதவாச்சிக்குப் பயணமானார்கள்.

அவர்கள் இன்று திருத்த வேலைகளை ஆரம்பிப்பர் என்றும் அவர்களுக்குத் துணையாக அனுராதபுரத்தில் இருந்தும் மின்சார ஊழியர்கள் சிலர் மதவாச்சிக்குச் சென்றுள்ளனர்.

ரம்பாவவில் உள்ள மின் கோபுர திருத்தவேலைகள் பூர்த்தியானல் லக்ஸபான மின்சாரம் வடபகுதிக்கு கிடைத்துவிடும் என்று மின்சாரசபையைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-10)

## வட்டிச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் கொழும்பிலிருந்து மற்றொரு தொகுதி அடகு நகைகளை எதிர்வரும் பத்தாம் திகதிக்கும் பதினைந்தாம் திகதிக்குமிடையில் யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ-126)

## யாழ் ஆஸ்பத்திரி.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
துடனான ஒப்பந்தம் போன்ற வழிமுறைகளும் கச்சேரியின் குறிப்பிட்ட ஒரு பிரிவு மூலமே வழிப்படுத்தப்பட்டன.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

"ஐந்து மாடிக் கட்டடம் கட்டுவதற்கு என யாழ். ஆஸ்பத்திரிக்குக் கிடைத்த ரூபா 70 லட்சம் நிதி பறிபோனது! ஒதுக்கப்பட்ட பணம் இம் முறையும் பாவிக்கப்படாமல் திரும்பியது" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் முன்பக்க முதற் செய்தி வெளியாகி இருந்தது அல்லவா?

அந்தச் செய்தியை வாசிப்பவர்களில் சிலர், சம்பந்தப்பட்ட நிதி போதனா வைத்தியசாலைக்குத் தான் வந்தது என்றும் அங்குள்ள அதிகாரிகளின் அசமந்தத்தினால் திரும்பிப் போனது என்றும் தப்பாக நினைக்கக்கூடும் என்பதால் இந்த விளக்கத்தைத் தாங்கள் அளிக்கவேண்டி இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

**ஆசிரியர் குறிப்பு:**
நேற்றைய செய்தியின் பத்தாவது பந்தி புதிய கட்டடத்திற்கான நிதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை என்பதைக் காட்டுவதாக அமைந்தது. நிதி போதனா வைத்தியசாலைக்கு வந்தது என்ற கருத்துப்பட இச் செய்தி எழுதப்படவில்லை (அ-உ)

## யாழ் நகரில் 1000 வீடுகள்

யாழ்ப்பாணம், டிச 28
அடுத்த வருடம் யாழ் குடாநாட்டில் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் ஆயிரம் வீடுகளை அகதிகளுக்கு அமைத்துக் கொடுப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் திட்டமிட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான அனுமதியை ஜெனீவாவிலுள்ள தலைமை ஸ்தாபனத்திடமிருந்து உயர் ஸ்தானிகராலயம் எதிர்பார்த்து இருக்கிறது (இ-ஐ)

## இன்று முதல் கண்டி பஸ்

யாழ்ப்பாணம். டிச 28
வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்—கண்டி பஸ்சேவை மீண்டும் இன்று முதல் ஆரம்பமாகிறது

இச்சேவை தினமும் காலை 6.45மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும். (உ-10)

## வெடி எமனாகியது

குருநகர், டிச 28
சிறுவர்கள் கொளுத்திய வெடிச்சத்தம் வயோதிப மாதுவின் உயிருக்கு எமனாகியது

இச் சம்பவம் குருநகர் றெக்கிளமேஷன் பாக் வீதியில் இடம்பெற்றது. கிறிஸ்ரியன் அருளம்மா (வயது 60) என்பவரே இறந்தவராவர். இவர் இருதயப் பலவீனத்துக்கு உள்ளாகி இருந்தார் என்று தெரிய வருகிறது, (இ-51)

## 3 மாதத்தினுள் 2,500 ரூபா அலவன்ஸ்!

கொழும்பு, டிச 28
உணவு முத்திரை பெறுபவர்களுக்கு மாதம் 2,500 ரூபா அலவன்ஸ் வழங்கும் திட்டம் அடுத்த மூன்று மாதங்களுக்குள் அமுல் நடத்தப்படும்.

உள்ளூராட்சி வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சுச் செயலாளர் தீ. ஆர். பாஸ்கரலிங்கம் இத்தகவலை நேற்று வெளியிட்டார். (உ-எ)

## தேற்கில்...

(1ம் பக்கத் தொடர்சி)
கொலைக்கான காரணம் தெரியவில்லை

குளியாட்பிட்டியில் எரிந்த நிலையில் இரண்டு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன,

நேற்று முன்தினம் காலையில் நாரஹன்பிட்டி எல்விற்றிகல மாவத்தையில் தனியார் பஸ் ஒன்றில் பயணஞ் செய்த ஒருவர் வைத்திருந்த துப்பாக்கி வெடித்தது; உடனே அவர் துப்பாக்கியுடன் பஸ்ஸில் இருந்து குதித்து தலைமறைவாகி விட்டார்.

இதேவேளை கொட்டாஞ்சேனையில் வீடு ஒன்றுக்குக் குண்டு வீசப்பட்டது. இதில் ஒருவர் காயமடைந்தார்.

## மாநாடு ஆரம்பமானது

இஸ்லாமாபாத். டிச, 28
'சார்க்' நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு நேற்று இஸ்லாமபாத்தில் ஆரம்பமானது. (உ)

## மண்டைதீவில் குறைந்தநிறையில் பாண் விற்பனை

மண்டைதீவு டிச 28
மண்டைதீவுப் பகுதியில் தற்பொழுது விற்பனையாகும் பாணின் நிறை மிக குறைவாகக் காணப்படுவதாக பாவனையாளர்கள் புகார் தெரிவித்துள்ளார்கள் (ச 88)

## கண்ணீர் அஞ்சலி

### யாக்கோப்பு அமலதாஸ்

(ஊர்காவற்றுறை தெ. ப. பொ உ. வி. கூ. சங்க நிர்வாக சபை உறுப்பினர்)

ஆண்டவன் படைப்பு: 31 - 01 - 1949
அகால மரணம்: 27 - 12 - 1988

நேற்றுவரை இவர் எம் கூட்டாளி ஆனல்
இன்றோ இவர் எம் மத்தியில் இல்லை
எத்தனை இடர்கள் மத்தியிலும்
யார் எது சொன்னாலும் மறுத்திடாமல் செய்திடுவீர்
செய்யும் தொழிலே தெய்வமென
கடமைக்கு சென்ற உம்மை
களிப்புடன் வருவீர் எனப் பார்த்திருந்தோம்
திடுக்கிட வைத்துவிட்டு
திடீரென மாயமாய் மறைந்திரே
ஊரார் புகழை அன்றும் இன்றும் பெற்ற நீர்
உமக்கென்று என்ன செய்தீர்?

நாளுக்கு நாள் உங்கள் பிரிவையிட்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

(நல்லடக்கம் 29-12-88 வியாழன் மு. ப. 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.)

உமது பிரிவால் துயருறும்:
பெற்றோர், மனைவி, பிள்ளைகள், ஊழியர்கள், அங்கத்தவர்கள்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை. (8715)

## திரு இராமலிங்கம் முத்தையா

(நயினாதீவு)

நயினாதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முத்தர் இராமலிங்கம் முத்தையா அவர்கள் 26 12-88இல் கொழும்பில் காலமானார். இவர் கிருஷ்ணபதியின் அன்புக் கணவரும், கலாநந்தி, நேசவேணி, கலைச்செல்வி, கலைரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை 28 - 12 - 88இல் நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. பஞ்சன்

(8574)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா துரைச்சாமி

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயிலடி வண்ணார்பண்ணையைச் சார்ந்தவருமான திருமதி சின்னம்மா துரைச்சாமி அவர்கள் 27-12-88 அன்று காலமானார்.

இவர் காலம்சென்ற கந்தையா துரைச்சாமியின் அன்பு மனைவியும் சிவசாசகம், சபாபதிப்பிள்ளை, கனகலட்சுமி அன்னலட்சுமி, தனபாக்கியலட்சுமி, காலஞ்சென்ற விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, சரோஜினிதேவி ஆகியோரின் அருமைத் தாயாரும், மயில்வாகனம் அன்னப்பிள்ளை, நாகேசு கந்தையா, செல்லத்துரை பொன்னம்மா, நடராசா இராசம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் ராஜலட்சுமி, தவமணிதேவி, சின்னத்தம்பி காலஞ்சென்ற விஞசித்தம்பி குமாரசுவாமி, இராஜேந்திரா, கணேஷரட்டினம் ஆகியோரின் அருமை மாமியாரும், செந்தூர்ச்செல்வன், விக்னேஸ்வரன், செந்தூர்ச்செல்வி, சிறிதரன், செந்தூர்க்கதிர், சிவதொண்டன், சிவகுமாரன், சிவராமலிங்கம், செல்வராணி, மார்க்கண்டன், சிவானந்தன், விஜயகுமார், நகுலேந்திரன், காலஞ்சென்ற விமலாதேவி, துரைராஜா, சரோஜினிதேவி, ராஜேந்திரா, ஜெயந்திரா, மோகனதாஸ், வாசுகி, பகீரதி, சிவமனோகரி, ராஜ்குமார், வாகீசன், சிவகாமி, பகீரதன், தர்சிகா அவர்களின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-12-88 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு 15/5 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்,

தகவல்:
எஸ். கணேஷரட்ணம்
(8515)

## திருமதி தர்மலிங்கம் செட்டியார் தையல்நாயகி அம்மாள்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலீஸ் நிலையம் அருகாமையில் வசித்து வந்த திருமதி தர்மலிங்கம் செட்டியார் தையல்நாயகி அம்மாள் 26- 12- 88 திங்கட்கிழமை காலமாகி விட்டார். இவர் இந்திராணிதேவி, விமலாதேவியின் அன்புத் தாயாரும், மகாலிங்கம் (A. I B. Office சிலாபம்,) கனகசூரியர் (T O ஜோன்ஸ் இன்ஜினியறிங் கொழும்பு) ஆகியோரின்மாமியாரும், ரேணுகாதேவி, பிரபாகரன், சக்திதேவி, விக்கினேஸ்வரி, கோணேஸ்வரி, சிவதுர்க்கா நாயகி ஆகியோரின் பேர்த்தியும், கந்தசாமிச் செட்டியார், சண்முகராஜா செட்டியார், நகுலராஜா செட்டியார், யோகாம்பிகை, பரமரத்தினம், வடிவாம்பிகை ஆகியோரின் சகோதரியும் சண்முகரத்தினம், கமலாதேவி, ஸ்ரீரஞ்சினி, இராமநாதன் செட்டியார், முத்துராமலிங்கம் செட்டியார், சந்திரபாலன் செட்டியார் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். ஈமக்கிரியைகள் 28- 12-88 இன்று புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு சுன்னாகத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பிள்ளைகள்;
இந்திராணி தேவி, விமலாதேவி.
பொலிஸ் அருகாமை,
கே. கே. எஸ் றோட்,
சுன்னாகம். (8708)

## செல்வி இராஜா சீதாதேவி

(விவசாய விஸ்தரிப்பு நிலையம்-புத்தூர்)

செல்வி இராஜா சீதாதேவி காலமானார். அன்னார் ஆதிமயிலிட்டியைச்சேர்ந்த திரு சி. இராஜா, திருமதி முத்துப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் - இராஜகோபாலன், கஸ்தூரிபாய், சரோஜினி, Dr ருக்மணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் தர்மலிங்கம், சொர்ணாம்பிகைதேவி, பாலபாஸ்கரன் ஆகியோரின் அருமை மைத்துனியும், கோலாவம்பூரைச் சேர்ந்த மூ. கந்தையா அவர்களின் அருமைப் பேத்தியும் ஈப்போவைச் சேர்ந்த திரு. திருமதி சண்முகத்தின் அருமை மருமகளும், கோலாலம்பூரைச் சேர்ந்த புவனேஸ்வரி ரஞ்சிதமலர், லிங்கேஸ்வரன், சிவலிங்கம், அற்புதமலர் (ஈப்போ) ஆகியோரின் அருமை மச்சாளும், வள்ளிப்பிள்ளை வேலுப்பிள்ளை ஆகியோரின் பெருமகளும் குமாரசாமி, வள்ளிநாயகி, தெய்வநாயகி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் குணாளன், குமணன், கேதீசன், கிருஷ்ணா, மகிந்தா ஆகியோரின் அருமை அன்டாவும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-12-88 காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்;
சி. இராஜா
V. C. Road
மயிலிட்டி,
காங்கேசன்துறை. (8714)

அஷ்டலக்ஷ்மி கலண்டர்
ஓர் அற்புதத் தயாரிப்பு
TRADE MARK

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ... 28 12 1988 இல் ... வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road Jaffna on wednesday 28th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org